அரியலூர் மாவட்டத்தில்

# வடகிழக்கு பருவமழை பணிகள் தொடர்பாக அனைத்துத் துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம்: மாவட்ட கண்காணிப்பு அலுவலர் விஜயலெட்சுமி தலைமையில் நடைபெற்றது



அரியலூர்,டிச.12

அரியலூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை 2024 தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்த அனைத்துத் துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் மாவட்ட கண்காணிப்பு அலுவலர்.மு.விஜயலெட்சுமி, தலைமையில், மாவட்ட கலெக்டர்பொ.இரத்தினசாமி, முன்னிலையில் நடைபெற்றது.அரியலூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு மழைநீர் வடிகால்கள் தூர்வாரிடவும், மரக்கிளைகளை சீரமைத்தல் மற்றும் பலவீமான மரங்களை அகற்றிடவும், பாலங்கள் மற்றும் மதகுகளுக்கு அடியில் உள்ள அடைப்புகளை அகற்றிடவும், பழைய மற்றும் பாழடைந்த கட்டிடங்களை அடையாளம் கண்டு பயன்படுத்துவதை தடை செய்திடவும் அத்தகைய கட்டமைப்புகளை பாதுகாப்பாக இடிப்பதற்கு நடவடிக்கை எடுத்திடவும், பலவீனமான மின்கம்பங்கள் / HT மற்றும் LT மின்கம்பிகள் ஆகியவற்றை கண்டறிந்து அவைகளை மாற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்திடவும் அனைத்து அரசு கட்டிங்களின் மேற்கூரையிலிருந்து குப்பைகளை அகற்றிடவும், அரசு கட்டிடங்களில் மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகளை ஆய்வு செய்திடவும், பொது இடங்களான மருத்துவமனைகள், ரயில் நிலையங்கள், பேருந்து நிலையங்கள் உள்ளிட்ட பொது இடங்களில் அடைபட்டுள்ள வடிகால்களை அடையாளம் கண்டு சரி செய்திடவும் நிலையான மழை அளவீடுகளை ஆய்வு செய்து, அவைகள் முறையாக பராமரிக்கப்படுவதை உறுதி செய்திடவும் போதுமான அளவில் மணல் மூட்டைகள் மற்றும் சவுக்கு குச்சிகளை தேவைப்படும் இடங்களில் முன்கூட்டியே இருப்பு வைத்திடவும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.\அரியலூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையானது அக்டோபர் முதல் டிசம்பர் தற்போது வரையில் இயல்பைவிட 40.23 சதவீதம் குறைவான அளவில் மழைபொழிந்துள்ளது. மேலும், அரியலூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையால் 20 நீர்நிலைகள் 100 சதவீதம் கொள்ளளவை எட்டியுள்ளது. இதனை தொடர்ந்து அந்நீர்நிலைகளை கண்காணித்திடவும், தேவையான முன்னேற்பாடு பணிகளை மேற்கொள்ளவும் வருவாய்த் துறை மற்றும் நீர் நிலைகள் தொடர்பான துறைகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. நீர்நிலைகளின் கரைகளையும், நீர்நிலைகளுக்கான வரத்து கால்வாய்கள் மற்றும் போக்கு கால்வாய்களின் தற்போதைய நிலை குறித்து அரியலூர் மற்றும் உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், நீர்வளத்துறை உதவி பொறியாளர்கள் மற்றும் நகராட்சி ஆணையர்கள் ஆகியோர்களிடம் கேட்டறிந்ததுடன், இதே போன்று 90 சதவீதத்திற்கு மேல் நீரம்பியுள்ள 16 நீர்நிலைகளிலிருந்து நீர் வெளியேறும் பாதைகள், வரத்து வாய்க்கால்கள் முறையாக தூர்வாரப்பட்டுள்ளதையும் உறுதி செய்திட அறிவுறுத்தப்பட்டது.

மேலும், தன்னார்வ அமைப்புகளை பயன்படுத்தி மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்திடவும், பாதிக்கப்படக்கூடிய நிலையில் உள்ள பள்ளி கட்டிடங்களை கண்டறிந்து அவைகளை உடனடியாக இடிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதோடு மட்டுமல்லாமல் அக்கட்டிங்களை முழுமையாக பயன்படுத்துவதை தவிர்க்கவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும் ஏரி, குளங்கள் மற்றும் நீர்நிலைகளில் உள்ள நீரின் அளவினை தொடர்ந்து கண்காணித்திட வேண்டும் எனவும் துறை அலுவலர்களுக்கு மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி இயக்குநர் திருமதி.மு.விஜயலெட்சுமி, அறிவுறுத்தினார்.இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.ம.ச.கலைவாணி, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஆ.ரா.சிவராமன், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர்ரவிச்சந்திரன் மற்றும் மாவட்ட நிலை அலுவலர்கள், வட்டாட்சியர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.


**உதவி ஆட்சியர் அலுவலகம், குளித்தலை**
**ஒ.மு.அ2/5095/2024**

சங்கர்கணேஷ்,
3/23பி, ஆண்டார் மெயின் ரோடு,
குளித்தலை கிராமம்,
குளித்தலை வட்டம்,
கரூர் மாவட்டம்.
– மனுதாரர்
– எதிர் –
வட்டாட்சியர், குளித்தலை.
– எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது தாய்மாமா "சீனிவாசன்" என்பவர் கடந்த 19.11.2017–ம் தேதி அன்று மேற்படி முகவரியில் உள்ள அவரது வீட்டில் இறந்ததை எதிர்மனுதாரர் பதிவு செய்யக்கோரி மனுதாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் தங்களது ஆட்சேபனைகளை 7 தினங்களுக்குள் மேற்படி சார் ஆட்சியர் அலுவலகத்தில் தெரிவித்துக் கொள்ளலாம். தவறும்பட்சத்தில் ஒருதலைபட்சமாக உத்தரவாகி விடும் என்பதை அறியவும்.

**சங்கர்கணேஷ், மனுதாரர், குளித்தலை.**



**தமிழ்நாடு அரசு – இந்து சமய அறநிலையத்துறை**
**அருள்மிகு சப்தரிஷீஸ்வரர் திருக்கோயில், திருத்தலையூர், முசிறி வட்டம், திருச்சி மாவட்டம்.**

**இணையவழி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.01 நாள்.05.02.2025 ஒப்பந்த வகை : LUMPSUM**

அருள்மிகு சப்தரிஷீஸ்வரர் திருக்கோயிலில் திருக்குளம் மராமத்து பணிக்கான ஒப்பந்தப்புள்ளி 18.12.2024 அன்று வைக்கப்பட்டிருந்தது. நிர்வாக காரணத்தினால் ஒப்பந்தப்புள்ளி ஒத்தி வைக்கப்பட்டதால் கால நீட்டிப்பு செய்து ஒப்பந்தப்புள்ளி திறப்பு 05.02.2025 அன்று வைக்கப்பட்டுள்ளது. எனவே அருள்மிகு சப்தரிஷீஸ்வரர் திருக்கோயில், திருத்தலையூர், முசிறி வட்டம், திருச்சி மாவட்டம், செயல் அலுவலர் திருக்கோயிலின் கீழ்காணும் பணிக்கு நடப்பில் உள்ள தமிழ்நாடு அரசுத்துறை / அரசு நிறுவனங்கள் / ஒப்பந்ததாரர் நிலை 4 மற்றும் அதற்குமேல் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள் ஆகியோரால் தமிழ்நாடு அரசின் அதிகாரப்பூர்வ ஒப்பந்தப்புள்ளி இணையதளம் https://tntenders.gov.in மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | பணியின் தோராய மதிப்பு ரூ. (ஜி.எஸ்.டி வரி 18% உட்பட) | முன் வைப்புத் தொகை ரூ. | பணி முடிக்க வேண்டிய காலம் | ஒப்பந்தக்காரர் தகுதி விபரம் | முன் வைப்புத் தொகை செலுத்தப்பட வேண்டிய அலுவலர் விபரம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | அருள்மிகு சப்தரிஷீஸ்வரர் திருக்கோவிலில் திருக்குளம் மராமத்து பணி | 53,75,000/– | 36,875/– | 12 மாதங்கள் | நடப்பு ஆண்டில் அரசு துறையில் அங்கீகாரம் பெற்ற ஒப்பந்ததாரர் நிலை 4 மற்றும் அதற்கு மேல் உள்ளவர்கள் | செயல் அலுவலர் அருள்மிகு சப்தரிஷீஸ்வர் திருக்கோயில், திருத்தலையூர் |

முக்கிய நாட்கள் :–

| | |
|---|---|
| 1. இணைய வழியில் ஒப்பந்தப்புள்ளிகள் கிடைக்கப்பெறும் காலம் | 20.01.2025 நண்பகல் 12.00 மணி முதல் 04.02.2025 பிற்பகல் 5.45 மணி வரை |
| 2. இணைய வழியில் ஒப்பந்தப்புள்ளி தரவுகளை பதிவேற்றம் செய்ய அனுமதிக்கப்படும் கடைசி நாள் மற்றும் நேரம் | 05.02.2025 பிற்பகல் 3.00 மணி வரை |
| 3. இணைய வழியில் ஒப்பந்தப்புள்ளிகளை திறக்கும் நாள் மற்றும் நேரம் | 05.02.2025 பிற்பகல் 3.30 மணி |

முக்கிய விபரங்கள், ஒப்பந்தப்புள்ளி ஆவணம் மற்றும் திருத்திய விவரங்கள் https://tntenders.gov.in–ல் மட்டுமே பெற வேண்டும். செய்தித்தாளில் வெளியிடப்படாது.
முன்வைப்புத் தொகை இணைய வழியாக மட்டுமே (Remitted through Online only) செலுத்தப்பட வேண்டும்.

செயல் அலுவலர்,
அருள்மிகு சப்தரிஷீஸ்வரர் திருக்கோயில்.
திருத்தலையூர், முசிறி வட்டம், திருச்சி மாவட்டம்.

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம்! சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

வெ.ஆ.எண்.332/செ.ம.தொ.அ/2024/திருச்சிராப்பள்ளி. நாள்: 11.12.2024



**கனம் உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம் மன்னார்குடி**
**த.ப.எண்.414/2024**

பாத்திமா மேரி
க/பெ.அடைக்கலசாமி ..மனுதாரர்
/எதிர்/
வட்டாட்சியர், முத்துப்பேட்டை
சார்பதிவாளர், முத்துப்பேட்டை ..எதிர்மனுதாரர்கள்

மனுதாரர்தரப்பு வழக்கறிஞர் அறிவிப்பு:

திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை தாலுக்கா, உதயமார்த்தாண்டபுரம், 2/35, செட்டிகுளத்தெரு என்ற முகவரியில் வசித்து வரும் மனுதாரர் தனது கணவர் அடைக்கலசாமி த/பெ. சௌரிமுத்து என்பவர் கடந்த 01.02.1999-ம் தேதி மேற்படி முகவரியில் இறந்ததாகவும், மேற்படி இறப்பை பதிவு செய்ய தவறிவிட்டதாகவும், பதிவு செய்ய உத்தரவிட வேண்டி மனு கொடுத்து அது சம்மந்தமாக விசாரணை எதிர்வரும் 16.12.2024-ம் தேதி அன்று வாய்தா போடப்பட்டுள்ளது அன்றைய தினம் நேரில் ஆஜராகி ஆட்சேபனை இருந்தால் தெரிவித்துக் கொள்ளவும்.

ஜி.முகமது உமர்ஹத்தாபு,எம்.ஏ.,பி.எல்.,
வழக்கறிஞர் & நோட்டரி,
திருத்துறைப்பூண்டி



**உயர்திரு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், மன்னார்குடி**
**C.M.P.No.399/2024**

பிரபு, த/பெ. ஜெயக்குமார்,
73/4, பூக்கொல்லை ரோடு,
மன்னார்குடி, திருவாரூர் மாவட்டம்
மனுதாரர்
–எதிர்–
1.சார்பதிவாளர், திருத்துறைப்பூண்டி
2.வட்டாட்சியர், திருத்துறைப்பூண்டி
எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு

மேற்கண்ட மனுதாரரின் தாத்தா "சீனிவாச முதலியார்" என்பவர் கடந்த 26.09.2005 ஆம் தேதி முதலியார் தெரு, விளக்குடி, திருத்துறைப்பூண்டி தாலுக்கா என்ற முகவரியில் இறந்ததை எதிர் மனுதாரர் பதிந்து வரும் இறப்பு பதிவேட்டில் பதியவேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். அம்மனு மீதான விசாரணை எதிர்வரும் 16.12.2024 ஆம் தேதி அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. இதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் வாய்தா தேதி அன்று மாலை 3.00 மணிக்கு நேரில் ஆஜராகி என் தெரிவித்துக் கொள்ளலாம் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

V. ஜெயபாலன் B.Sc., B.L.,
வழக்கறிஞர் & நோட்டரி
மன்னார்குடி



**உயர்திரு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், மன்னார்குடி**
**C.M.P.No.404/2024**

கண்ணன், த/பெ. சோமு,
33, அண்ணா நகர்,
மன்னார்குடி, திருவாரூர் மாவட்டம்
மனுதாரர்
–எதிர்–
நகராட்சி ஆணையர்,
மன்னார்குடி
எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்கண்ட மனுதாரரின் தாயார் "செல்லம்மாள்" என்பவர் கடந்த 17.01.2001 ஆம் தேதி மேற்கண்ட முகவரியில் இறந்ததை எதிர் மனுதாரர் பதிந்து வரும் இறப்பு பதிவேட்டில் பதியவேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். அம்மனு மீதான விசாரணை எதிர்வரும் 16.12.2024 ஆம் தேதி அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. இதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் வாய்தா தேதி அன்று மாலை 3.00 மணிக்கு நேரில் ஆஜராகி என் தெரிவித்துக் கொள்ளலாம் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

V. ஜெயபாலன் B.Sc., B.L.,
வழக்கறிஞர் & நோட்டரி
மன்னார்குடி



**உயர்திரு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், மன்னார்குடி**
**C.M.P.No.408/2024**

திலகவதி, க/பெ. ஜெயபால்,
2/590, மெயின்ரோடு, மகாராஜபுரம்,
திருமக்கோட்டை வருவாய் கிராமம்,
மன்னார்குடி Tk, திருவாரூர் Dt,
மனுதாரர்
–எதிர்–
1.சார்பதிவாளர், மன்னார்குடி
2.வட்டாட்சியர், மன்னார்குடி
எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு

மேற்கண்ட மனுதாரரின் மகள் "நிர்மலா" என்பவர் கடந்த 06.06.1996 ஆம் தேதி மேற்கண்ட முகவரியில் பிறந்ததை எதிர் மனுதாரர் பதிந்து வரும் பிறப்பு பதிவேட்டில் பதியவேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். அம்மனு மீதான விசாரணை எதிர்வரும் 16.12.2024 ஆம் தேதி அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. இதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் வாய்தா தேதி அன்று மாலை 3.00 மணிக்கு நேரில் ஆஜராகி என் தெரிவித்துக் கொள்ளலாம் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

V. ஜெயபாலன் B.Sc., B.L.,
வழக்கறிஞர் & நோட்டரி
மன்னார்குடி



**உயர்திரு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், மன்னார்குடி**
**C.M.P.No.412/2024**

செல்வராணி, க/பெ. லேட். கர்ணன்,
2/10, நடுத்தெரு, 48, வடபாதி,
மன்னார்குடி Tk,
திருவாரூர் Dt,
மனுதாரர்
–எதிர்–
1.சார்பதிவாளர், மன்னார்குடி
2.வட்டாட்சியர், மன்னார்குடி
எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு

மேற்கண்ட மனுதாரரின் மகள் "ரேகா" என்பவர் கடந்த 07.02.2001 ஆம் தேதி மேற்கண்ட முகவரியில் பிறந்ததை எதிர் மனுதாரர் பதிந்து வரும் பிறப்பு பதிவேட்டில் பதியவேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். அம்மனு மீதான விசாரணை எதிர்வரும் 16.12.2024 ஆம் தேதி அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. இதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் வாய்தா தேதி அன்று மாலை 3.00 மணிக்கு நேரில் ஆஜராகி என் தெரிவித்துக் கொள்ளலாம் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

V. ஜெயபாலன் B.Sc., B.L.,
வழக்கறிஞர் & நோட்டரி
மன்னார்குடி



**உயர்திரு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், மன்னார்குடி**
**C.M.P.No.413/2024**

உலகநாதன், த/பெ. அய்யாவு,
7/112பி, தெற்கு தெரு,
பெருமாள் கோவில் நத்தம்,
திருமக்கோட்டை வருவாய் கிராமம்
மன்னார்குடி, திருவாரூர் மாவட்டம்
மனுதாரர்
–எதிர்–
வட்டாட்சியர், மன்னார்குடி
எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்கண்ட மனுதாரரின் தாயார் "குஞ்சம்மாள்" என்பவர் கடந்த 29.07.2015 ஆம் தேதி மேற்கண்ட முகவரியில் இறந்ததை எதிர் மனுதாரர் பதிந்து வரும் இறப்பு பதிவேட்டில் பதியவேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். அம்மனு மீதான விசாரணை எதிர்வரும் 16.12.2024 ஆம் தேதி அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. இதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் வாய்தா தேதி அன்று மாலை 3.00 மணிக்கு நேரில் ஆஜராகி என் தெரிவித்துக் கொள்ளலாம் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

V. ஜெயபாலன் B.Sc., B.L.,
வழக்கறிஞர் & நோட்டரி
மன்னார்குடி



**உயர்திரு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், மன்னார்குடி**
**த.ப.எண்.465/2023**

மனோகரன், த/பெ.ராமசாமி,
4/7, அக்ரஹாரத் தெரு,
நாச்சிக்குளம்,
உதயமார்த்தாண்டபுரம்
முத்துப்பேட்டை தாலுக்கா மனுதாரர்
–எதிர்–
வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
முத்துப்பேட்டை
எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்கண்ட மனுதாரரின் தந்தை ராமசாமி என்பவர் கடந்த 26.07.1992 ஆம் தேதி மேற்படி முகவரியில் இறந்ததை எதிர் மனுதாரர் பதிந்துவரும் இறப்பு பதிவேட்டில் பதியவேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவை பொருத்து யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு தேதியிலிருந்து 30 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் தெரிவித்துக் கொள்ளலாம் என்று இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது..

C.கதிரவன் M.B.A., M.L.,
வழக்கறிஞர், மன்னார்குடி



**உயர்திரு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், மன்னார்குடி**
**த.ப.எண்.464/2023**

வடிவேலு, த/பெ.பொதியப்பன்,
கொண்டியம்பலங்காடு,
முத்துப்பேட்டை தாலுக்கா
மனுதாரர்
–எதிர்–
செயல் அலுவலர்
பேரூராட்சி அலுவலகம்
முத்துப்பேட்டை
எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்கண்ட மனுதாரரின் தந்தை பொதியப்பன் என்பவர் கடந்த 10.05.2014 ஆம் தேதி மேற்படி முகவரியில் இறந்ததை எதிர் மனுதாரர் பதிந்துவரும் இறப்பு பதிவேட்டில் பதியவேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவை பொருத்து யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு தேதியிலிருந்து 30 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் தெரிவித்துக் கொள்ளலாம் என்று இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது..

C.கதிரவன் M.B.A., M.L.,
வழக்கறிஞர், மன்னார்குடி



**உயர்திரு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், மன்னார்குடி**
**த.ப.எண்.467/2023**

சீதாலெட்சுமி, த/பெ.குமரசாமி,
மேலத்தொண்டியங்காடு,
முத்துப்பேட்டை தாலுக்கா
மனுதாரர்
–எதிர்–
வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்
முத்துப்பேட்டை
எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்கண்ட மனுதாரரின் தந்தை குமரசாமி என்பவர் கடந்த 10.06.2000 ஆம் தேதி மேற்படி முகவரியில் இறந்ததை எதிர் மனுதாரர் பதிந்துவரும் இறப்பு பதிவேட்டில் பதியவேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவை பொருத்து யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு தேதியிலிருந்து 30 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் தெரிவித்துக் கொள்ளலாம் என்று இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது..

C.கதிரவன் M.B.A., M.L.,
வழக்கறிஞர், மன்னார்குடி



**உயர்திரு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், மன்னார்குடி**
**த.ப.எண். 400/2024**

ஈஸ்வரமூர்த்தி, த/பெ.ஜெகநாதன்,
5/140, தெற்குத்தெரு,
பல்லாக்கொள்ளை, செருமங்கலம்–2
மன்னார்குடி Tk.
மனுதாரர்
–எதிர்–
1.வட்டாட்சியர் மன்னார்குடி
2.சார்பதிவாளர் மன்னார்குடி
எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு

மேற்கண்ட மனுதாரரின் தந்தை ஜெகநாதன் என்பவர் கடந்த 17.01.1975 ஆம் தேதி மேலேகண்ட முகவரியில் இறந்ததை எதிர்மனுதாரர்கள் பதிந்துவரும் இறப்பு பதிவேட்டில் பதியவேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். அம்மனு மீதான விசாரணை எதிர்வரும் 16.12.2024 ஆம் தேதி அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. இதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் வாய்தா தேதி அன்று காலை 10.30 மணிக்கு நேரில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

K. கல்யாணராமன் B.A., B.L.,
வழக்கறிஞர், மன்னார்குடி



**சார் ஆட்சியர் அலுவலகம், கும்பகோணம்**
**த.ப. 741/2024**

A.முகம்மது ஆரீப்,
த/பெ.அப்துல்கபூர்,
1/132, மொல்லா காலனி,
அஜியா தெரு, ராஜகிரி,
பாபநாசம் தாலுக்கா.
– மனுதாரர்
மாண்புமிகு.சார்ஆட்சியர் அவர்கள்
கும்பகோணம்.
– எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது தந்தை "அப்துல் கபூர்" என்பவர் கடந்த 13.05.1988 அன்று 3A3 புது ரோடு, பண்டாரவாடை முகவரியில் இறந்ததை பதிவு செய்யக்கோரி எதிர்மனுதாரருக்கு உத்தரவிட வேண்டி சார் ஆட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் தெரிவித்து கொள்ளலாம். ஆட்சேபனை எதுவும் இல்லையெனில் ஒருதலைபட்சமாக முடிவு செய்யப்படும் என்பதை இந்த அறிவிப்பின் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

A.முகம்மது ஆரீப்
மனுதாரர், ராஜகிரி.




திருச்சி மத்திய மாவட்ட பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக மாவட்ட செயலாளர் உமாநாத் தலைமையில் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடைப்பெற்றது. இக்கூட்டத்தில், புத்தூர் பகுதி செயலாளர் செந்தில்குமார், வன்னியர் சங்க செயலாளர் கதிர்ராஜா, மாவட்ட அமைப்பு தலைவர் வினோத், மேற்கு தொகுதி தலைவர் சிவப்பிரகாசம், ஸ்ரீரங்க தொகுதி செயலாளர் கார்த்தி, தொகுதி தலைவர் ராஜு, ஜங்ஷன் பகுதி செயலாளர் பாஸ்கர், கலந்துக் கொண்டனர்.



திருச்சியில் வணிக கட்டிடங்களுக்கு வாடகையுடன் சேர்த்து 18 சதவீதம் ஜிஎஸ்டி வழங்க வேண்டும் என்கிற ஒன்றிய அரசின் முடிவை கண்டித்து தமிழ்நாடு வணிகர்கள் சங்க பேரமைப்பு சார்பில் தலைமை தபால் நிலையம் அருகே சாலை மறியல் போராட்டம் நடைபெற்றது.



கைசிக ஏகாதசியை முன்னிட்டு திருமலை திருப்பதி தேவஸ்தானத்திலிருந்து ஸ்ரீரங்கம் அரங்கநாதசுவாமிக்கும், உற்சவர் நம்பெருமாளுக்கு பட்டு வஸ்திரங்கள் மற்றும் அரங்கநாயகி தாயாருக்கு பட்டு புடவைகள் கொண்டு வந்திருந்தனர். திருப்பதி தேவஸ்தான துணை நிர்வாக அலுவலர் லோகநாதன், மடம் பொறுப்பாளர் ராஜா ரெட்டி ஆகியோரிடமிருந்து வஸ்திரமரியாதையை ஸ்ரீரங்கம் கோவில் இணை ஆணையர் மாரியப்பன், உள்துறை கண்காணிப்பாளர் வேல்முருகன்பெற்றுக்கொண்டனர்.



தஞ்சாவூர் மாவட்டம் குருவிக்கரம்பை ஊராட்சி ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில் வளாகத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் நடைபெற்ற மக்கள் நேர்காணல் முகாமில் கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். சட்டமன்ற உறுப்பினர் என்.அசோக்குமார், மாவட்ட ஊராட்சித்தலைவர் .உஷா வருவாய் கோட்டாட்சியர்.ஜெயஸ்ரீ, சேதுபாவாசத்திரம் ஒன்றியக்குழுத்தலைவர் முத்துமாணிக்கம். பேராவூரணி வட்டாட்சியர் தெய்வானை உட்பட பலர் உள்ளனர்.

# திருவாரூரில் வணிகர் சங்க பேரமைப்பினர் ஆர்ப்பாட்டம்



திருவாரூர் டிச 12

வாடகை கடைகளுக்கு 18 சதவீதம் ஜிஎஸ்டி வரி விதிப்பை மத்திய அரசு திரும்பப்பெற வேண்டும், வணிக உரிம கட்டண உயர்வு மற்றும் தொழில்வரி உயர்வை ரத்து செய்ய வேண்டும், மாநில அரசு ஆண்டுதோறும் 6 சதவீதம் கூடுதல் சொத்துவரி விதிப்பை திரும்பபெற வேண்டும்,மாநில முழுவதும் குப்பை வரியினை ஒரேசீராக அறிவித்திட வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி திருவாரூர் புதிய ரயில் நிலையம் முன்பு தமிழ்நாடு வணிகர் சங்க பேரமைப்பினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.

மாவட்ட தலைவர் விகேகே.ராமமூர்த்தி தலைமையில் நடைப்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் தஞ்சை மண்டல தலைவர் செந்தில்நாதன், மாநில துணைத்தலைவர் ஞானசேகரன், திருவாரூர் மாவட்ட செயலாளர் ஆதப்பன், பொருளாளர் கருணாநிதி, துணைத்தலைவர் மதிவாணன், வணிகர் சங்கங்களின் பேரமைப்பு நிர்வாகிகள் மோகன், முரளி, முருகதாஸ், நடராஜன் மற்றும் உறுப்பினர்கள், விஜயபுரம் வர்த்தக சங்க தலைவர் பாலு உட்பட ஏராளமானோர் கொட்டும் மழையில் குடை பிடித்தபடி வணிகர்களை நசுக்கும் மத்திய அரசின் பல்வேறு வரிவிதிப்புகளை திரும்பபெறக் கோரி கோசமிட்டு கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.


Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
No. 1 Santhanapuram, Madurai-Trichy 4 Way Main Road, Nagamangalam, Trichy-620 012
Ph: 0431-2680969
E-Mail: trichyedi@thinaboomi.com
RNI.Regn No.61511/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

